## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.52/2021

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 04.02.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருஞானம் | ஜாதி | : | |
| த/பெயர் | : | முருகையன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்தானது தங்கவேல் என்பவருக்கு சொந்தமான என்றால் சரிதான். தங்கவேல் என்பவருக்கு அரசாங்கத்தால் தாவா சொத்து ஒப்படைக்கப்பட்டதென்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.284/12 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் 7 ஏர்ஸ். 51 குழி. ஆகும். கடந்த 1972 ஆம் வருடம் தங்கவேல் என்பவருக்கு அரசாங்கத்தால் தாவா சொத்து ஒப்படைக்கப்பட்டது. தங்கவேல் என்பவரிடமிருந்து தாவா சொத்து அரசாங்கத்தால் ஒப்புடைவு செய்யப்பட்டதற்கான ஆவணத்தை பெற்றுக்கொண்டேனா என்றால் இல்லை.

2. தங்வேல் என்பவரின் வாரிசுகள் தான் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். அவர்களும் அதே கிராமத்தில் வேறு தெருவில் குடியிருந்து வருகிறார்கள். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தை தங்கவேல் என்பவர் என்னிடம் கிரையம் செய்து கொடுப்பதாகவோ, விற்பனையை பதிவு செய்து கொடுப்பதாகவோ எழுதப்பட்டுள்ளதா என்றால் கிரையம் சாசனம் என்று சொல்லி தான் எழுதிக்கொடுத்தார். அதில் எழுதப்படாமல் கூட இருக்கலாம்.

3)தங்கவேல் கடந்த 2002 ஆம் வருடம் இறந்துவிட்டார். தங்கவேல் உயிருடன் இருக்கும்போதோ அவர் இறந்தற்கு பின்போ வா.சா.ஆ.1 ஆவணத்தின் தாவா

சொத்தை கிரையம் பதிவு செய்து தரச்சொல்லி சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. கடந்த 2010 ஆம் வருடம் பிரதிவாதிகள் என் மீது சட்ட நடவடிக்கை எடுத்தார்கள். என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் தாவா சொத்து அவர்களுக்கு வேண்டும் என்று கேட்டார்கள். கடந்த 2009 ஆம் வருடம் பிரதிவாதிகள் வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அனுப்பியது வைத்து தான் சட்ட நடவடிக்கை எடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அறிவிப்புக்கு பிறகு தாவா சொத்து எனது அனுபவத்தில் இருப்பதாக சொல்லி தாவா சொத்தை கிரையம் செய்து தரச்சொல்லி பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. தாலுக்கா அலுவலகத்தில் அறிவிப்பை வைத்து மனு கொடுத்தேன்.

4) தாலுக்கா அலுவலகத்தில் மனு கொடுக்கும்போது தாவா சொத்து என் வசம் இருப்பதாக கூறி பிரதிவாதிகளை கிரையம் செய்து தரச்சொல்லி கேட்டேனா என்றால் கேட்டேன். தாலுக்கா அலுவலகத்தில் நான் மனு கொடுத்தாக சொல்லி எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் தாவா சொத்து அவர்கள் வசம் இருப்பதாகவும், அதில் நான் இடையூறு செய்யக்கூடாது சொல்லி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அனுபவம் என்னிடம் தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் பிரதிவாதிகள் அவர்கள் பெயரில் பட்டா மாற்றம் கோரி அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

5) அதன் அடிப்படையில் பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் பிரதிவாதிகளின் தந்தையார் பெயரில் தான் சிட்டா மற்றும் அடங்கல் உள்ளது என்றால் சரிதான். கிரைய சாசனம் பதிவு செய்யாததால் அவர்கள் பெயரில் உள்ளது. எனது தரப்பில் தாக்கல் செய்து கிஸ்து ரசீதுகள் அனைத்தும் பிரதிவாதிகள் தந்தையார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அவர்களது பெயரில் நான் தான் கிஸ்து செலுத்தியுள்ளேன்.

6) நான் தாக்கல் செய்துள்ள 5 கிஸ்து ஆவணங்களில் தங்கவேல் பெயர் மட்டும் தான் உள்ளது என்றாலும், செலுத்துபவர் என்ற இடத்தில் எனது பெயர் இல்லை

என்றாலும் சரியல்ல. தங்கவேல் என்பவரிடம் குழி 42 ரூபாய் வீதம் 51 குழிக்கு 2,142/- ரூபாய் என கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. தங்கவேல் செலுத்தவேண்டிய ஒப்படைவு தொகையை நான் செலுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் அதற்குண்டான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தங்கவேல் உயிருடன் இருந்தபோது, அதற்கு பின்னிட்டோ அல்லது வழக்கு தாக்கல் செய்தற்கு பின்போ 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடம் தாவா சொத்தை கிரயம் செய்து தரச்சொல்லி கேட்டேனா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கேட்டேன். எப்போது கேட்டேன் என்றால் 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடம் அடிக்கடி கேட்டு வந்தேன். 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடம் நான் கிரையம் செய்து தரச்சொல்லி கேட்டதாக எனது வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.02.14 10:39:04 +0530

District Munsif

Mannargudi.